Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 79 | உள்ளூர் - 20.03.2026 | வெள்ளி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 79 | வெளியூர் - 21.03.2026 | சனி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

இந்த 6 ராசிகளுக்கு பொற்காலம் தொடக்கம் ..!

"நான்கு நாட்களில் எல்லாம் முடிஞ்சிரும்" – இபிஎஸ்!

அனல் பறக்கும் தேர்தல் கள செய்திகள்!

ரயில்வே ஊழியர்களுக்கு மெகா ஜாக்பாட்!

## குற்ற வழக்குகளை சந்திக்கும் 73 மாநிலங்களவை எம்.பி.க்கள்!



புதுடெல்லி, மார்ச். 20–

மாநிலங்களவை எம்.பி.க்கள் வேட்புமனு தாக்கலின்போது சமர்ப்பித்த பிரமாண பத்திரங்களை ஆய்வு செய்து, ஜனநாயக சீர்திருத்த சங்கம் என்ற அமைப்பு ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது.

மொத்தம் 233 மாநிலங்களவை எம்.பி.க்களில், ஜார்கண்ட் மாநிலத்தில் ஒரு இடம் காலியாக உள்ளது. 3 எம்.பி.க்களின் பிரமாண பத்திரங்கள் கிடைக்கவில்லை. எனவே, மீதி உள்ள 229 எம்.பி.க்களின் பத்திரங்களை ஆய்வு செய்துள்ளது. இவர்களில் சமீபத்தில் தேர்வு செய்யப்பட்ட 37 எம்.பி.க்களும் அடங்குவர்.

229 பேரில் 73 பேர் (32 சதவீதம்) தங்கள் மீது குற்ற வழக்குகள் இருப்பதாக அறிவித்துள்ளனர். அவர்களில் 36 பேர் (16 சதவீதம்) கடுமையான குற்ற வழக்குகளை சந்தித்து வருகின்றனர். ஒரு எம்.பி., கொலை வழக்கை சந்தித்து வருகிறார். 4 எம்.பி.க்கள் கொலை முயற்சி வழக்கையும், 3 பேர் பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளையும் எதிர்நோக்கி உள்ளனர். கட்சிவாரியாக பார்த்தால், பா.ஜ.க.–27 எம்.பி.க்கள், காங்கிரஸ்–12, திரிணாமுல் காங்கிரஸ்–13, ஆம் ஆத்மி–4, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, பாரத் ராஷ்டிர சமிதி–தலா 3 என குற்ற வழக்குகளை சந்தித்து வருகிறார்கள்.

மேலும், 31 மாநிலங்களவை எம்.பி.க்கள் (14 சதவீதம்) தங்களுக்கு தலா ரூ.100 கோடிக்கு மேல் சொத்துகள் இருப்பதாக அறிவித்துள்ளனர்.

கட்சிகள் வாரியாக பார்த்தால், பா.ஜ.க.வில் 6 எம்.பி.க்களும், காங்கிரசில் 5 எம்.பி.க்களும், ஒய்.எஸ்.ஆர்.காங்கிரசில் 4 பேரும், ஆம் ஆத்மியில் 2 பேரும், பாரத் ராஷ்டிர சமிதியில் 2 பேரும், தேசியவாத காங்கிரசில் 3 பேரும் தலா ரூ.100 கோடிக்கு மேல் சொத்துகள் வைத்துள்ளனர். ஒரு மாநிலங்களவை எம்.பி.யின் சராசரி சொத்து மதிப்பு ரூ.120 கோடி ஆகும்.

எம்.பி.யின் சராசரி சொத்து மதிப்பு ரூ.128 கோடியே 61 லட்சம். தி.மு.க.வில் ஒரு எம்.பி.யின் சராசரி சொத்து மதிப்பு ரூ.11 கோடியே 90 லட்சம். ஆம் ஆத்மியில் ஒரு எம்.பி.யின் சராசரி சொத்து மதிப்பு ரூ.574 கோடி ஆகும்.

அதிகபட்சமாக, பாரத் ராஷ்டிர சமிதி எம்.பி. பண்டி பார்த்தசாரதி ரூ.5 ஆயிரத்து 300 கோடி சொத்து வைத்துள்ளார். ஆம் ஆத்மி எம்.பி. ராஜிந்தர் குப்தா ரூ.5 ஆயிரத்து 53 கோடி சொத்துகளும், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் எம்.பி. அல்லா அயோத்யா ராமிரெட்டி ரூ.2 ஆயிரத்து 577 கோடி சொத்துகளும் வைத்துள்ளனர். அதே சமயத்தில், ஆம் ஆத்மி எம்.பி. சந்த் பல்பீர்சிங், வெறும் ரூ.3 லட்சம் சொத்துகளுடன் கடைக்கோடியில் இருக்கிறார். மணிப்பூரை சேர்ந்த மகாராஜா சனஜோபா லெய்ஷெம்பா ரூ.5 லட்சம் சொத்துகளும், திரிணாமுல் காங்கிரசின் பிரகாஷ் சிக் பரைக் ரூ.9 லட்சம் சொத்துகளும் வைத்துள்ளனர்.

## தொலைநோக்கு திட்டத்துடன் விரைவில் திமுக தேர்தல் அறிக்கை; முதல்வர் ஸ்டாலின்!



சென்னை, மார்ச். 20–

'தமிழகம் 2030 எனும் தொலைநோக்கு திட்டத்துடன் திமுக தேர்தல் அறிக்கை வெகு விரைவில் வெளியிடப்படும்'' என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: தமிழகம் 2030 எனும் தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையிலும், அதனை சிறப்பாகவும் நேர்த்தியாகவும் நிறைவேற்றுகின்ற வகையிலும், கூடுதல் அம்சங்களுடன் 2026 சட்டசபை தேர்தல் களத்திற்கான திமுகவின் தேர்தல் அறிக்கை வெகு விரைவில் வெளியாக இருக்கிறது. எந்தத் தேர்தல் களமாக இருந்தாலும் மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய தேர்தல் அறிக்கை என்றால் அது திமுகவின் தேர்தல் அறிக்கைதான்.

2021 முதல் 2026 வரையிலான 5 ஆண்டுகளில் இந்தியாவில் எந்த மாநிலமும் செய்ய முடியாத சாதனைத் திட்டங்களையும், இந்தியாவின் பல மாநிலங்கள் பின்பற்றக்கூடிய முதன்மையான திட்டங்களையும் நிறைவேற்றியுள்ள திராவிட மாடல் அரசின் சாதனைகளையும், அதனால் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் கிடைத்துள்ள பயன்களையும், அவர்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் இடைவிடாது பிரசாரம் செய்யும் பணியை திமுகவினர் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.

இல்லை.. இல்லை..

தமிழகம் VS டில்லி என்பதை முன்வைத்துதான் இந்தத் தேர்தல் களம் என்று நாம் சொல்வதை நிரூபிப்பது போலவே, டில்லியில் இருந்துதான் எல்லாம் முடிவு செய்யப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் இபிஎஸ் டில்லியில் இருப்பது எதற்காக? தமிழகத்திற்கு வழங்கப்படாமல் வஞ்சிக்கப்படும் நிதியை வாங்கித் தருவதற்காகவா? தமிழகத்தில் நிறைவேற்றப்படாமல் முடக்கப்பட்டிருக்கும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துவதற்காகவா? மாநில உரிமைகளைக் காப்பாற்றுவதற்காகவா? சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காகவா? இல்லை.. இல்லை.. இல்லவே இல்லை. தமிழகத்தில் உள்ள வீடுகளில் அடுப்பு எரிந்தால் என்ன, எரியாவிட்டால் எங்களுக்கென்ன என்ற மனநிலையுடன்தான் எதிர்க்கட்சியினர் தங்களது கூட்டணிப் பேச்சுவார்த்தை யை நடத்திக் கொண்டிரு க்கிறனர்.

**அடகு வைக்க...**

தேர்தல் களத்தைச் சந்திப்பதற்கே டில்லியின் சம்மதம் வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்களின் கைகளில் தமிழகம் சிக்கிக்கொண்டால் ஒவ்வொரு நாளும் என்ன பாடுபட வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்துள்ள தமிழ் மக்கள் ஒருபோதும் டில்லியின் ஆதிக்கத்தையும், அதன் அடிமைக் கூட்டத்தையும் அனுமதிக்க மாட்டார்கள். தங்கள் சுயநலனுக்காகச் சொந்தக் கட்சியை அடமானம் வைத்ததுபோல, தமிழகத்தையும், டில்லியிடம் அடகு வைக்கத் தயங்காதவர்கள் அவர்கள் என்பதை மக்கள் அறிவார்கள்.

**வெற்றி பெறுவோம்**

இனி எதிர்க்கட்சியினர் எடுக்கும் முடிவு என்பது டில்லி எடுக்கும் முடிவுதான் என்பதையும் மக்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். தமிழகத்தின் உரிமைகளைக் காப்பதற்கும், தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்குமான வலிமை திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கே உண்டு என்பதே மக்களின் உறுதியான நம்பிக்கை. அந்த நம்பிக்கையை உருவாக்கியது திராவிட மாடல் ஆட்சி. அதனால் நாம் மக்களிடம் செல்வோம். களத்தில் நின்று வெற்றியைப் பெறுவோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## ஈரான் ஹார்முஸ் ஜலசந்தி திறப்பு: இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்புக்கு பெரிய பலன்!



ஈரான், மார்ச். 20–

இந்தியா போன்ற தனது நட்பு நாடுகளின் நலனைக் கருத்தில் கொண்டு, ஈரான் ஹார்முஸ் ஜலசந்தி கடல் வழித்தடத்தை மீண்டும் திறந்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. இரண்டு கப்பல்களை ஈரான் விடுவித்திருந்த நிலையில், தற்போது முழுமையான போக்குவரத்து அனுமதி கிடைத்திருப்பது இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்யப் பெரிதும் உதவும்.

## பியூஸ்கோயல் சென்னை வருகை!



சென்னை, மார்ச். 20–

அதிமுக கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு இன்னும் நான்கு நாட்களில் தொகுதி பங்கீட்டிற்கான ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது என எடப்பாடி பழனிசாமி நேற்று டெல்லியில் பேட்டி அளித்தார். இந்நிலையில் நாளை பகல் 12 மணிக்கு பாஜக மேலிட பொறுப்பாளர் பியூஸ் கோயல் சென்னை வரவிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. நாளை மாலை 4மணியளவில் பியூஸ்கோயல் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து தொகுதி பங்கீடு அதிகாரப்பூர்வமாக தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக திரை மறைவில் எந்தெந்த தொகுதிகள், எண்ணிக்கை எல்லாம் முடிவாகியிருக்க கூடிய நிலையில் நேற்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அமித்ஷாவை சந்தித்து விட்டு இன்று சென்னை திரும்புகிறார்.

## 9 வான்வெளிகளைத் தவிர்க்கவும்

# அவசரகாலத் திட்டங்களை உறுதி செய்யவும்.. விமான நிறுவனங்களுக்கு

## DGCA உத்தரவு..!



புதுடெல்லி, மார்ச். 20–

மேற்கு ஆசியாவில் தீவிரமடைந்து வரும் நிலையில், சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) அன்று, பாதுகாப்பு இடர் மதிப்பீடுகளின் ஒரு பகுதியாக, வளைகுடா பிராந்தியத்தில் உள்ள சில வான்வெளிகளைத் தவிர்க்கவும், வலுவான மாற்றுத் திட்டங்களை உறுதி செய்யவும் விமான நிறுவனங்களைக் கேட்டுக்கொண்டது. பஹ்ரைன், ஈரான், ஈராக், இஸ்ரேல், ஜோர்டான், குவைத், லெபனான், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகியவற்றின் வான்வெளிகளைத் தவிர்க்குமாறு DGCA விமான நிறுவனங்களைக் கேட்டுக்கொண்டது.

சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஓமன் மற்றும் சவுதி அரேபியாவின் வான்வெளிகளில் இந்திய விமான நிறுவனங்கள் விமானங்களை இயக்கலாம் என்று அந்த ஒழுங்குமுறை ஆணையம் கூறியது. கட்டாய அறிக்கைப் புள்ளிகளைப் பின்பற்றி வரையறுக்கப்பட்ட பகுதிகளுக்குத் தெற்கே அமைந்துள்ள சவுதி அரேபியா மற்றும் ஓமனின் வான்வெளிக்குள், FL 320 அல்லது 32,000 அடிக்குக் கீழே விமானங்களை இயக்க வேண்டாம் என்று அது விமான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியது.

அந்த 9 வான்வெளிகள் குறித்து, ''பாதிக்கப்பட்ட வான்வெளிக்குள்... அனைத்து விமான மட்டங்களிலும் மற்றும் உயரங்களிலும் விமானங்களை இயக்குவதைத் தவிர்க்க வேண்டும்'' என்று DGCA விமான நிறுவனங்களைக் கேட்டுக்கொண்டது. தொடர் செயல்பாடுகள், விமான நிறுவனத்தின் பாதுகாப்பு இடர் மதிப்பீட்டின் அடிப்படையில் அவர்களின் விருப்பத்திற்கு உட்பட்டதாக இருக்கும்..

பாதிக்கப்பட்ட பிராந்தியத்தில் உள்ள விமான நிலையங்களுக்கான செயல்பாடுகள், அங்கு தற்போது மற்ற சர்வதேச விமான நிறுவனங்கள் இயங்கி வருகின்றன, விமான நிறுவனங்களின் பாதுகாப்பு இடர் மதிப்பீடுகளின் ஒரு பகுதியாக, அனைத்து சாத்தியங்களையும் சமாளிக்க வலுவான மாற்றுத் திட்டமிடலைக் கொண்டிருக்க வேண்டும்,'' என்று DGCA கூறியது.

இந்த அறிவுரை உடனடியாக அமலுக்கு வந்தது என்றும், மேலும் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டாலோ அல்லது திருத்தங்கள் செய்யப்பட்டாலோ தவிர, மார்ச் 28 வரை செல்லுபடியாகும் என்றும் ஒழுங்குமுறை ஆணையம் கூறியது. ''ஏற்கனவே வானில் பறந்துகொண்டிருக்கும் விமானங்களைப் பாதிக்கும் வான்வெளி கட்டுப்பாடுகளான சமீபத்திய NOTAM–கள் குறித்த தகவல்களைத் தங்கள் விமானப் பணியாளர்களுக்கு வழங்குமாறு விமான நிறுவனங்கள் அறிவுறுத்தப்படுகின்றன,'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

NOTAM என்பது விமானிகள் மற்றும் பணியாளர்களுக்கு வான்வெளி மற்றும் விமான நிலையங்கள் குறித்த நிகழ்நேரத் தகவல்களை வழங்கும் 'விமானிகளுக்கான அறிவிப்பு' (Notice to Airmen) என்பதைக் குறிக்கிறது. ''ஈரானிய எல்லைக்குள் உள்ள இலக்குகள் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் சமீபத்தில் நடத்திய இராணுவத் தாக்குதல்கள், பயணிகள் விமானப் போக்குவரத்திற்கு அதிக அபாயகரமான சூழலை ஏற்படுத்தியுள்ளன. இந்தத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக, ஈரான் பதிலடி நடவடிக்கைகளை அறிவித்துள்ளது,'' என்று கூறியுள்ள விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநர் (DGCA), தற்போதைய நிலைமை பயணிகள் விமானச் செயல்பாடுகளுக்குக் கடுமையான ஆபத்துகளை ஏற்படுத்துகிறது என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

## திடீர் திருப்பம்! தமிழக வாழ்வுரிமை கட்சி திமுக கூட்டணியிலிருந்து விலகல்!





சென்னை, மார்ச். 20–

தமிழக அரசியல் சூழலில் புதிய திருப்பமாக, கூட்டணி அரசியலில் ஏற்பட்ட முரண்பாடுகள் பல்வேறு கட்சிகளின் நிலைப்பாட்டை மாற்றி வருகின்றன. அதில் முக்கியமானதாக, திமுக கூட்டணி அமைப்பில் நீடித்து வந்த தமிழக வாழ்வுரிமை கட்சி விலகியுள்ளது. : இது தற்போது அரசியல் வட்டாரத்தில் கவனம் ஈர்த்துள்ளது.

**கூட்டணியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு**

திமுக கூட்டணியில் நீடித்து வந்த தொகுதிப் பங்கீடு தொடர்பான இழுபறி முடிவுக்கு வந்த நிலையில், தமிழக வாழ்வுரிமை கட்சி (தவாக) வரவிருக்கும் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு கட்சித் தலைவர் வேல்முருகன் முன்வைத்த கூடுதல் இடங்களுக்கான கோரிக்கையும், முக்கிய தேர்தல் வாக்குறுதிகள் குறித்த விவாதங்களிலும் திமுக தலைமையுடன் உடன்பாடு எட்டப்படாததே இந்த பிரிவிற்கான முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

**100 தொகுதிகளில் போட்டி திட்டம்**

இந்த முடிவின் தொடர்ச்சியாக, தமிழகம் முழுவதும் சுமார் 100 தொகுதிகளில் தவாக வேட்பாளர்களைக் களமிறக்க கட்சித் தலைமையம் திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கை, மாநில அரசியல் சமநிலையை மாற்றக்கூடிய முக்கியமான முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

**வேல்முருகன் போட்டியிலில்லை**

இத்தேர்தலில் கட்சித் தலைவர் வேல்முருகன் அவர்கள் நேரடியாகப் போட்டியிடப் போவதில்லை என்ற தகவல் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது கட்சியின் உள்துறை யோசனைகளுக்கான ஒரு முக்கிய சிக்னலாகவும் பார்க்கப்படுகிறது.

மொத்தத்தில், தமிழக வாழ்வுரிமை கட்சியின் இந்த தனித்துப் போட்டியிடும் முடிவு, வரவிருக்கும் தேர்தலில் அரசியல் சமிக்ஞைகளை மாற்றக்கூடிய ஒரு முக்கிய கட்டமாக உருவெடுத்துள்ளது. இதன் தாக்கம் வாக்காளர்களின் மனநிலையிலும் கூட்டணி அரசியலிலும் எவ்வாறு பிரதிபலிக்கும் என்பது எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 20.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 06-ம் தேதி

# வங்கி வேலைகளிலும் கை வைக்கும் ஏஐ..!!

ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஐடி வேலை செய்பவர்களுக்கு தான் அச்சுறுத்தலாக இருக்கிறது என்றால் வங்கி வேலைகளில் இருப்பவர்களுக்கும் தொல்லை கொடுக்க தொடங்கிவிட்டது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் நம்முடைய அன்றாட வேலையில் ஒன்றாக கலந்து விட்டது. இந்த நிலையில் பல்வேறு நிறுவனங்களும் ஏஐ தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதிலும் தங்களுடைய தொழிலை ஏஐ உடன் இணைப்பதிலும் தான் கவனம் செலுத்துகின்றன. ஹெச்ஆர் வேலைகள், பிபிஓ வேலைகள் மற்றும் ஐடி வேலைகள் படிப்படியாக மனிதர்கள் வசமிருந்து ஏஐ தொழில்நுட்பத்தின் வசம் சென்ற வண்ணம் இருக்கிறது. தற்போது வங்கி வேலைகளுக்கும் இதே சூழல் உண்டாகியிருக்கிறது.

உலகின் முன்னணி வங்கி சேவை நிறுவனமான ஹெச்எஸ்பிசி நிறுவனம் தங்கள் ஊழியர்களில் 10% பேர் அதாவது 20000 பேரை வேலையிலிருந்து நீக்க முடிவு செய்திருக்கிறதாம். லண்டனை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது ஹெச்எஸ்பிசி வங்கி. வங்கி மற்றும் நிதி சேவைகளை வழங்கக்கூடிய இந்த நிறுவனம் உலகம் முழுவதும் புகழ்பெற்றதாக இருக்கிறது. 1865ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 160 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறது ஹெச்எஸ்பிசி வங்கி. உலகின் பழமையான வங்கி சேவை நிறுவனமான ஹெச்எஸ்பிசி வங்கி 211000 ஊழியர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது. இவர்களில் 10% பேர் வேலையை இழக்க உள்ளனர்.

இது தொடர்பாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படவில்லை. ஹெச்எஸ்பிசி வங்கி தலைமைச் செயல் அதிகாரியாக செயல்படும் ஜார்ஜஸ் எல்டரி ஏஐ தொழில்நுட்பத்தை பல்வேறு பிரிவுகளில் வேலைக்கு அமர்த்த ஆலோசித்து வருகிறாராம். ஏஐ ஏஜெண்டுகளை கொண்டு மனிதர்களை வேலையிலிருந்து நீக்க ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. படிப்படியாக ஊழியர் பணிநீக்கம் நடக்கும் என்றும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் என இலக்கு நிர்ணயம் செய்து 20000 பேரும் பணிநீக்கப்படுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஈரான் போரால் நடக்கும் மாற்றம்? வங்கியின் non client facing roles அதாவது நேரடியாக வாடிக்கையாளர்களுடன் தொடர்பில் இல்லாத பதவிகளில் இருப்பவர்கள் இந்த பணிநீக்கத்தில் அதிகம் பாதிக்கப்பட உள்ளனர் என கூறப்படுகிறது. ஹெச்எஸ்பிசி வங்கி தங்களுடைய உலக சேவை மையங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் வேலைக்கு தான் முதலில் வேட்டு வைக்க இருக்கிறது.

நாடாளுமன்றத்தில் எதிரொலித்த பிரச்சினை ஹெச்எஸ்பிசி நிறுவனத்தை மறுகட்டமைப்பு செய்யும் பணிகளை தீவிரப்படுத்தி உள்ள நிலையில் தான் இந்த பணி நீக்கம் தொடர்பான ஆலோசனை குறித்த செய்தி வெளியாகியிருக்கிறது. செலவினங்களை குறைத்து பணிகளை தொழில்நுட்பங்களோடு ஒருங்கிணைக்க ஹெச்எஸ்பிசி வங்கி தீவிரம் காட்டிவருகிறது. உலகின் பழமையான வங்கியே ஏஐ காரணம் கூறி பணிநீக்க நடவடிக்கை எடுப்பதால் மற்ற வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் வேலை செய்வோருக்கு இது கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

# “ஜெட் பிளாக் ‘எல்லாம் சுபமாக நடக்கும்’ என்ற பிரச்சாரத்தில் நம்பிக்கையின் உருவமாக தோனி”

சென்னை , மார்ச். 20–

கிரிக்கெட் மற்றும் ஆன்மிக நம்பிக்கையை இணைக்கும் வகையில், ஜெட் பிளாக் (Zed Black) நிறுவனம் தனது புதிய ‘Sab Shubh Hoga’ (எல்லாம் சுபமாக அமையும்) பிரச்சாரத்தை வெளியிட்டுள்ளது. மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த மைசூர் தீப் பர்ஃப்யூமரி ஹவுஸ் (MDPH)



நிறுவனத்தின் முக்கிய பிராண்டான ஜெட் பிளாக், எம்.எஸ். தோனி நடித்துள்ள இந்த தொலைக்காட்சி விளம்பரத்தின் மூலம் Zed Black Samarpan Pure Camphor மற்றும் Bhimseni Camphor தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. மார்ச் 19ஆம் தேதி தொடங்கிய சைத்ர நவராத்திரியுடன் இணைந்து இந்த பிரச்சாரம் தேசிய தொலைக்காட்சி, டிஜிட்டல் மற்றும் ரீட்டெயில் தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விளம்பரத்தில் எம்.எஸ். தோனி கதைச்சொல்லியாக தோன்றி, ஒரு மாணவன், அலுவலக ஊழியர், கடைக்காரர் ஆகியோரின் வாழ்க்கை தருணங்களை இணைத்து “Sab Shubh Hoga” என்ற நம்பிக்கையை வலியுறுத்துகிறார். இந்த காம்பெயின் Oberoi IBC நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. நிறுவன இயக்குனர் அங்கித் அகர்வால், நேர்மறை எண்ணமும் உண்மையான பிரார்த்தனையும் நம்பிக்கையை உருவாக்கும் என்ற கருத்தை மையமாக கொண்டு இந்த முயற்சி உருவாக்கப்பட்டதாக கூறினார். அன்ஷுல் அகர்வால் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக உற்பத்தி மற்றும் விநியோக வலையமைப்பில் முதலீடு செய்யப்படுவதாக தெரிவித்தார்.

ஜெட் பிளாக் நிறுவனம், கற்பூரம் மற்றும் பூஜை பொருட்கள் சந்தையில் தனது நிலையை வலுப்படுத்தும் நோக்கில் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது. 2 கிராம் முதல் 500 கிராம் வரை பல்வேறு வடிவங்களில் கிடைக்கும் இந்த தயாரிப்புகள், மாஸ்பிரீமியம் வகையில் நிலைநிறுத்தப்படுகின்றன. 10 லட்சத்திற்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் 40+ சர்வதேச சந்தைகளில் இருப்புடன், FY28க்குள் ₹1,000 கோடி வருவாய் இலக்கை அடைவதையும் நிறுவனம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

# இசுஸு மோட்டார்ஸ் இந்தியா நடத்தும் “ஐ-கேர் ப்ரீ சம்மர் முகாம்” கோடை காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு சேவை மற்றும் சலுகைகள்!

சென்னை , மார்ச். 20–

இசுஸு மோட்டார்ஸ் இந்தியா, அதன் D–MAX பிக்அப் மற்றும் SUV வாகனங்களுக்கான “இசுஸு ஐ–கேர் ப்ரீ சம்மர் முகாம்” (‘ISUZU I–Care Pre Summer Camp’) ஐ நடத்தவுள்ளது. இந்த முகாம், வாடிக்கையாளர்களுக்கு கோடை காலத்தில் பிரச்சினை அற்ற ஓட்டுநர் அனுபவத்தை வழங்கும் நோக்கத்துடன், முன்காப்பு பராமரிப்பு சரிபார்ப்பு சேவைகள் மற்றும் சிறப்பு




சலுகைகளை வழங்கும் வகையில் நடைபெறுகிறது.

முகாம் காலம் மற்றும் இடம்: 2026 மார்ச் 23 முதல் 28 வரை, இந்தியா முழுவதும் உள்ள அனைத்து இசுஸு அங்கீகாரம் பெற்ற சேவை நிலையங்களில் நடைபெறும். இதில், ஆக்ரா, சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், மும்பை, மதுரை, திருச்சி, திப்ருகார் உள்ளிட்ட 80க்கும் மேற்பட்ட நகரங்கள் வாடிக்கையாளர்கள் பயன் பெறலாம். முன்பதிவு மற்றும் தொடர்பு: வாடிக்கையாளர்கள் தங்கள் அருகாமையிலுள்ள இசுஸு விற்பனையாளர் நிலையத்தை அழைக்கலாம் அல்லது isuzu.in/ser–vicebooking.html இணையதள முகவரிக்கு செல்லலாம். மேலதிக தகவல்களுக்கு 1800 4199 188 (இலவச சேவை எண்) க்கு தொடர்பு கொள்ளலாம்.

# கிரிக்கெட்டில் சிக்னிஃபையின் பெரிய முயற்சி: EcoLink, ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் இணை ஸ்பான்சர்

சென்னை , மார்ச். 20–

உலகின் முன்னணி ஒளியியல் நிறுவனம் Signify, தனது வளர்ந்து வரும் மின்சார பிராண்டான EcoLink–ஐ Rajasthan Royals அணியுடன் இணைந்து, T20 சீசனை முன்னிட்டு முக்கிய கூட்டாண்மையை அறிவித்துள்ளது. இந்த ஒத்துழைப்பின் மூலம் EcoLink, அணியின் அசோசியேட் ஸ்பான்சராக இணைந்து, இந்தியாவின் மிகப்பெரிய விளையாட்டு மேடையில் தனது பிராண்டு இருப்பை பலப்படுத்துவதோடு, கோடிக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்களுடன் தொடர்பை மேலும் விரிவுபடுத்துகிறது. இந்த கூட்டாண்மை, EcoLink–ன் புதிய தயாரிப்பு வரிசையுடன்




இணைந்து, இந்திய நுகர்வோருக்கு நம்பகமான மற்றும் திறன் மிக்க தீர்வுகளை வழங்கும் அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. போட்டி முழுவதும் முன்னணி ஹெட்கியர் பிராண்டிங்குடன், ஒருங்கிணைந்த விளம்பர பிரச்சாரங்கள் மற்றும் டிஜிட்டல் செயல்பாடுகள் மூலம் பிராண்டின் காட்சிப்படுத்தல் அதிகரிக்கப்படும்.

Sumit Joshi, “இந்த கூட்டாண்மை மூலம் இந்தியா முழுவதும் நுகர்வோரின் வலுவான தொடர்பை உருவாக்க முடியும்” என்றார். நிக்கி குப்தா, “கிரிக்கெட் பெரிய அளவில் ரசிகர்களை இணைக்கும் சக்தி வாய்ந்த தளம்” எனக் கூறினார். அலோக் சித்ரா, “இந்த இணைப்பு ரசிகர்களுடன் உற்சாகமான ஈடுபாட்டை உருவாக்கும்” என தெரிவித்தார்.

# இந்தியச் சந்தையில் தனது இருப்பை வலுப்படுத்த, நிப்பான் பெயிண்ட் பஞ்சாப் கிங்ஸுடன் இணைகிறது.

சென்னை , மார்ச். 20–

நிப்பான் பெயிண்ட் இந்தியா, பஞ்சாப் கிங்ஸ் அணியுடன் IPL 2026க்கான அதிகாரப்பூர்வ கூட்டாளராக இணைந்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஒவ்வொரு போட்டியிலும் பஞ்சாப் கிங்ஸ் ஜெர்சியின் வலது கை ஸ்லீவில் நிப்பான் பெயிண்ட் லோகோ இடம்பெறும். இந்த கூட்டாண்மை, உலகளாவிய அளவில் மிகப்பெரிய கிரிக்கெட் ரசிகர்கள் முன் பிராண்டின் காட்சியினை அதிகரிக்கிறது.




அதிகாரப்பூர்வ அறிமுக நிகழ்வில் Sharad Malhotra, மார்க் டைட்டஸ் மற்றும் சதீஷ் மேனன் கலந்து கொண்டு அறிவித்தனர். மேலும், யுஸ்வேந்திர சாஹல் மற்றும் ஷஷாங்க் Singh நிகழ்வில் பங்கேற்றனர். இந்த கூட்டாண்மை, #NayeIn–diaKeNayeRang முயற்சியின் ஒரு பகுதியாக, இளம் ரசிகர்களுடன் வலுவான தொடர்பை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

இந்த ஒத்துழைப்பின் மூலம், ரசிகர் ஈடுபாட்டு பிரச்சாரங்கள், டிஜிட்டல் செயல்பாடுகள் மற்றும் “Flabber Sher” மாஸ்கட் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நிப்பான் பெயிண்ட் இந்தியா வளர்ச்சியை வேகப்படுத்தவும், பஞ்சாப் கிங்ஸ் அணியின் உற்சாகமான ரசிகர் அடிப்படையுடன் இணைந்து, IPL முழுவதும் வலுவான பிராண்ட் முன்னிலையை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

# ரியல்மி P4 Lite 5G அறிமுகம் 7000mAh பெரிய பேட்டரி ஆரம்ப விலை ₹11,499, நீண்டநேர பயன்பாட்டுக்கு புதிய தேர்வு

கோயம்புத்தூர் , மார்ச்.20–

இந்திய இளைஞர்களிடையே பிரபலமான realme நிறுவனம் தனது புதிய ரியல்மி P4 Lite 5G அறிமுகம் மாடலை அறிமுகப்படுத்தியுள்ளது. “தி ஸ்மூத் 7000mAh பயனியர்” என அழைக்கப்படும் இந்த ஸ்மார்ட்போன், இந்த விலைப் பிரிவில் 7000mAh பேட்டரி கொண்ட ஒரே மாடலாக திகழ்கிறது. ஒருமுறை சார்ஜ் செய்தால் சுமார் 1.47 நாட்கள் வரை பயன்படுத்த முடியும் என்பதால், நீண்டநேர பேட்டரி தேவையுடைய பயனர்களுக்கு இது சிறந்த தேர்வாகும்.

இந்த மொபைலில் 7000mAh பிரம்மாண்ட பேட்டரியுடன் 144Hz ரிஃப்ரெஷ் ரேட் டிஸ்ப்ளே, 900 நிட்ஸ் பிரைட்னஸ் மற்றும் ஐ–கம்போர்ட் அம்சங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், MediaTek Dimen–sity 6300 5G சிப்செட், 6nm பிராசஸ் மற்றும் ஆக்டா–



கோர் செயல்திறன் மூலம் வேகமான மல்டிடாஸ்கிங் அனுபவம் கிடைக்கிறது. 5300mm VC கூலிங் சிஸ்டம் காரணமாக நீண்ட நேர பயன்பாட்டிலும் சூடு கட்டுப்பாட்டில் இருக்கும்.

ரியல்மி P4 Lite 5G MIL–STD–810H தரச் சான்றுடன் ஆர்மர்ஷெல் பாதுகாப்பு, IP64 டஸ்ட் & வாட்டர் ரெசிஸ்டன்ஸ், 13MP AI கேமரா மற்றும் டுயல் வியூ வீடியோ போன்ற அம்சங்களுடன் வருகிறது. மொசைக் கிரீன், மொசைக் ப்ளூ நிறங்களில் கிடைக்கும் இந்த போன், ஆரம்ப விலை ₹11,499 ஆக மார்ச் 25 முதல் Flipkart, realme.com மற்றும் ரீடைல் கடைகளில் விற்பனைக்கு வரும்.

# “சிக்சருடன் சாதனை! எடெல்வெய்ஸ் லைஃப் 6-வது ஆண்டாக சிறந்த பணியிடம் அங்கீகாரம்”

சென்னை, மார்ச். 20–

எடெல்வெய்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக ‘ கிரேட் ப்ளேஸ் டு வொர்க்’ அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்த அங்கீகாரம், நீண்டகால தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் மற்றும் ஊழியர்களின் முன்னேற்றத்தை முன்னிலைப்படுத்தும் நிறுவனத்தின் உறுதியை வலியுறுத்துகிறது. நீண்டகால வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்ட வணிகத்தின் நம்பகத்தன்மையையும் இது பிரதிபலிக்கிறது.

edelweiss life insurance

நிறுவனத்தின் முக்கிய மனிதவள அலுவலர் Saba Adil கூறுகையில், “வாடிக்கையாளர்களுடன் நெருங்கிய உறவை உருவாக்கும் எங்கள் வணிகத்தில், ஆலோசனையும் சேவையும் மையப் பங்காற்றுகின்றன. இதில், எங்கள் ஊழியர்களே மிகப்பெரிய பலம். திறன் மேம்பாட்டு பயிற்சிகள், ஆதரவு சூழல் மற்றும் புதுமையை ஊக்குவிக்கும் பணியிட கலாச்சாரம் மூலம், ஒவ்வொருவரும் தங்கள் முழுத் திறனை வெளிப்படுத்தும் சூழலை உருவாக்குவது எங்களின் நோக்கம்” என்றார். மேலும், நிறுவனத்தின் மூத்த தலைமையியல் குழுவில் சுமார் 70% பேர் உள்நாட்டிலேயே வளர்ந்தவர்கள்; முக்கிய திறமைகள் கொண்ட பணியாளர்களில் 95% மேற்பட்ட நிலைத்தன்மை பதிவாகியுள்ளது.

பெண்கள் முன்னேற்றத்திலும் நிறுவனம் முக்கிய கவனம் செலுத்துகிறது. 2025 டிசம்பர் நிலவரப்படி விற்பனைத் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவம் 38% ஆக உயர்ந்துள்ளது (கடந்த 5 ஆண்டுகளில் 10% அதிகரிப்பு). மொத்த பணியாளர்களில் 34% பெண்கள் உள்ளனர்; முக்கிய திறமைகள் குழுவில் சுமார் 30% பெண்கள் இடம்பெற்றுள்ளனர். வேலை–வாழ்க்கை சமநிலை, வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் ஆதரவு சூழல் மூலம் பெண்களின் நிலைத்தன்மையும் உற்பத்தித்திறனும் உயர்ந்துள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.



# இந்த 6 ராசிகளுக்கும் பொற்காலம் தொடங்கப் போகுது..!



ஜோதிடத்தின்படி, குறிப்பிட்ட சில கிரகங்கள் குறிப்பிட்ட ராசிகளுக்கு வழிகாட்டிகளாகவும் உதவியாளர்களாகவும் செயல்படுகின்றன. இந்த கிரகங்களை திருப்திப்படுத்துவதன் மூலம், அந்தந்த ராசிக்காரர்கள் விரைவான முன்னேற்றத்தை அடைவதற்கும், பிரச்சனைகள், அழுத்தங்கள், சச்சரவுகள் மற்றும் கருத்து வேறுபாடுகளிலிருந்து விடுபடுவதற்கும் வாய்ப்பைப் பெறுவார்கள் என்று, ஜோதிட நிபுணர்கள் கூறுகின்றனர்..

இந்த ஆண்டில் இத்தகைய நன்மைகளைப் பெறப்போகும் ராசிகள் மேஷம், ரிஷபம், சிம்மம், கன்னி, விருச்சிகம் மற்றும் மகரம் ஆகியவையாகும். இந்த ராசிகளுக்கு இந்த ஆண்டில் வழிகாட்டப்போகும் கிரகங்கள் செவ்வாய், சனி, குரு, ராகு மற்றும் சூரியன் ஆகியவையாகும். இந்தக் கிரகங்களின் தாக்கத்தால், இந்த ராசிக்காரர்கள் தங்கள் இலக்குகளை அடைவதற்கும், தாங்கள் விரும்பியவற்றைச் சாதிப்பதற்கும் உரிய வாய்ப்புகளைப் பெறுவார்கள்.

**மேஷம்**

துணிச்சல், வீரம் மற்றும் விடாமுயற்சிக்குப் பெயர் பெற்ற மேஷ ராசிக்கு, இந்த ஆண்டு முழுவதும் செவ்வாய் கிரகம் பெரும் ஆதரவை வழங்கும். செவ்வாய் கிரகமே இந்த ராசியின் அதிபதியாகவும் இருப்பதால், இந்த ராசிக்காரர்கள் தாங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு முயற்சியையும் அல்லது வாய்ப்பையும் பாதியிலேயே கைவிடமாட்டார்கள். இவர்கள் தங்கள் வருமானத்தை அதிகரிக்கவும், புதிய வேலைவாய்ப்பைப் பெறவும், தங்கள் தொழில் மற்றும் வியாபாரத்தை மேம்படுத்திக்கொள்ளவும் செவ்வாய் கிரகம் உறுதுணையாக இருக்கும். இந்த ராசிக்காரர்கள் தினமும் ‘ஸ்கந்த ஸ்தோத்திரத்தை’ (முருகன் துதி) பாராயணம் செய்வது மிகவும் நன்று.

**ரிஷபம்**

இந்த ராசிக்காரர்களுக்குப் பணத்தின் மீது மிகுந்த பற்று இருக்கும். இவர்கள் தங்கள் குடும்பத்தின் மீது அதிக எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பார்கள். தங்கள் வருமானத்தை ஒரு திட்டமிட்ட முறையில் அதிகரிக்கவும், முதலீடுகளை மேற்கொள்ளவும், தங்கள் தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய சாதனைகளைப் படைக்கவும் இவர்கள் கடுமையாக உழைப்பார்கள். இம்முயற்சிகளில் சனி பகவான் இவர்களுக்குப் பெரிதும் உதவப்போகிறார். சனி பகவான் இவர்களுக்குச் சாதகமாக இருப்பதால், இவர்களுக்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்குப் பிரகாசமான வாய்ப்புகள் உள்ளன. இந்த ராசிக்காரர்கள் அடிக்கடி தங்கள் தலைமுடியை மழித்துக்கொள்வதன் மூலம், சனி பகவானின் அருளை இன்னும் அதிகமாகப் பெற முடியும்.

**சிம்மம்**

சிம்ம ராசிக்காரர்கள் இயல்பாகவே தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிருப்பதுடன், மிகுந்த வீரமும், சவால்களை எதிர்கொள்ளும் திறனும் பெற்றிருப்பார்கள். எனவே, இவர்கள் ஏதேனும் ஒரு நிறுவனத்தின் தலைவராகவோ அல்லது உயர் பதவிகளிலோ அமர்வதற்குத் தீவிரமான முயற்சிகளை மேற்கொள்வார்கள். இம்முயற்சிகளில் குரு பகவான் இவர்களுக்குத் துணை நிற்பார்.

குரு பகவானின் அருளால், இவர்கள் நிச்சயமாக மிக உயர்ந்த நிலையை அடைவார்கள். இவர்கள் அடிக்கடி தத்தாத்ரேயப் பெருமானை வழிபடுவது மிகவும் சிறந்தது.

கன்னி ராசிக்காரர்கள் அறிவுக்கூர்மை, திட்டமிட்ட செயல்பாடுகள், விடாமுயற்சி மற்றும் எத்தகைய துன்பங்களையும் தாங்கிக்கொள்ளும் மன உறுதி ஆகிய நற்பண்புகளைக் கொண்டிருப்பார்கள்.

சனி பகவானுக்குரிய ஒழுக்கம், விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு ஆகிய பண்புகள், இந்த ராசிக்காரர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியாக இருக்கும். சனியின் ஒழுக்கம், விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை இவர்களின் தொழில் மற்றும் வணிகத்தை வளர்க்கவும், இயன்றால் அவற்றை விரிவுபடுத்தவும், வருமானத்தை அதிகரிக்கவும் உதவக்கூடும். சனியின் அருளால், இவர்கள் நிச்சயமாக வெற்றியை அடைவார்கள். சனியின் ஆசிகளைப் பெற, அவரை அடிக்கடி வழிபடுவது சிறந்தது.

**விருச்சிகம்**

பொறுமை, விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பிற்குப் பெயர் பெற்ற இந்த ராசியினரை, சூரிய பகவான் (ரவி) விரைவில் உச்ச நிலைக்கு உயர்த்தக்கூடும். வேலையில் உயர்ந்த பதவிகளை அடைய வேண்டும் என்ற இவர்களின் லட்சியம், சூரியனின் அருளால் வெகு விரைவில் நிச்சயமாக நிறைவேறும். ஒரு நிறுவனத்தின் தலைவராக வேண்டும் என்ற இவர்களின் விருப்பமும் நிறைவேற வாய்ப்புள்ளது.

சொத்து சேர்க்கை, சொந்த வீடு மற்றும் சொந்த வாகனம் போன்ற கனவுகள் நனவாகக்கூடும். இவர்கள் ‘ஆதித்ய ஹிருதயம்’ பாராயணம் செய்வது மிகவும் சிறந்தது.

விடாமுயற்சி, பொறுமை, சகிப்புத்தன்மை மற்றும் ஒழுக்கத்திற்குப் பெயர் பெற்ற மகர ராசியினருக்கு, இந்த ஆண்டில் சொந்த வீடு, சொத்து சேர்க்கை, பணியிடத்தில் அங்கீகாரம் மற்றும் தொழில், வணிகத்தில் லாபம் ஈட்டுதல் போன்ற விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

இந்த விருப்பங்கள், இலக்குகள் மற்றும் லட்சியங்களுடன் தொடர்புடைய சனிகிரகம், இவர்களுக்குத் துணையாக நின்று உதவும். சனியின் உதவியால், இவர்கள் நிச்சயமாகப் பெரும் சாதனைகளை நிகழ்த்துவார்கள். சனியின் ஆசியால், இவர்கள் செல்வந்தர்களாகத் திகழ்வார்கள்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## நீங்கள் ஒருபோதும் புறக்கணிக்கக்கூடாத புற்றுநோய் அறிகுறிகள் இவைதான்..!



இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளாகப் புற்றுநோய் இறப்புகள் அதிகரித்து வருகின்றன. 2021–ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 15,000 புற்றுநோய் இறப்புகள் பதிவாகியுள்ளன. புற்றுநோய் என்பது உடலின் செல்கள் கட்டுப்பாடின்றி வளர்ந்து, உடலின் பிற பகுதிகளுக்கும் பரவும் ஒரு நிலையாகும்.

சுற்றுச்சூழல் மாற்றங்கள், வாழ்க்கை முறை மற்றும் பரம்பரை காரணிகளால் ஏற்படும் மரபணு மாற்றங்களே புற்றுநோய்க்குக் காரணமாக அமைகின்றன. ஆய்வகப் பரிசோதனைகள் மற்றும் திசுப் பரிசோதனைகள் (biopsies) மூலம் இந்நோய் கண்டறியப்படுகிறது. அறுவை சிகிச்சை, கதிர்வீச்சு சிகிச்சை, கீமோதெரபி மற்றும் நோய் எதிர்ப்புச் சிகிச்சை (immunotherapy) போன்ற சிகிச்சைகள் தற்போது கிடைக்கின்றன. இப்போது, புற்றுநோயின் முக்கிய அறிகுறிகள் எவை என்பதைப் பார்ப்போம்.

புற்றுநோயின் முதல் அறிகுறி அதீத சோர்வாகும். நீங்கள் எவ்வளவு ஓய்வு எடுத்தாலும், இந்தச் சோர்வு நீங்காமலே இருக்கும். இது லுகேமியா போன்ற இரத்தப் புற்றுநோய்க்கான அறிகுறியாகவோ அல்லது உடல் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுவதைத் தடுக்கும் பிற வகை புற்றுநோய்களுக்கான அறிகுறியாகவோ இருக்கலாம். இந்த நிலை தொடர்ந்தால், நீங்கள் உடனடியாக ஒரு மருத்துவரை அணுக வேண்டும்.

தோலுக்கு அடியிலோ, மார்பகத்திலோ அல்லது நிணநீர் முடிச்சுகளிலோ புதிதாகக் கட்டிகளோ அல்லது வீக்கங்களோ தோன்றினால், அது உடலில் கட்டி வளர்வதற்கான (tumor growth) அறிகுறியாக இருக்கலாம். இது எவ்வளவு விரைவாகக் கண்டறியப்படுகிறதோ, அந்த அளவுக்குச் சிகிச்சையின் வெற்றி வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

தோலின் நிறம் திடீரென மாறுதல் (கருமையாதல் அல்லது மஞ்சள் நிறமாதல்), மச்சங்கள், மருக்கள் மற்றும் தோல் புண்கள் தோன்றுதல் ஆகியவை தோல் புற்றுநோய்க்கான அறிகுறிகளாக இருக்கலாம். எனவே, இவற்றில் ஏதேனும் ஒன்றை நீங்கள் கவனித்தால், உடனடியாக ஒரு மருத்துவரை அணுகவும்.

நீண்ட நாட்களாகத் தொடரும் இருமல் மற்றும் உணவை விழுங்குவதில் ஏற்படும் சிரமம் ஆகியவை நுரையீரல், தொண்டை மற்றும் உணவுக்குழாய் புற்றுநோய்க்கான அறிகுறிகளாகும். இருமலின்போது இரத்தத்துளிகள் வெளிப்பட்டாலோ அல்லது இருமலுடன் வலியும் ஏற்பட்டாலோ, உடனடியாக மருத்துவரைச் சந்திப்பது மிகவும் அவசியமாகும்.

மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, மலத்தில் இரத்தம் வெளியேறுதல், சிறுநீர் கழிக்கும்போது வலி ஏற்படுதல் அல்லது சிறுநீரில் இரத்தம் தென்படுதல் போன்ற அறிகுறிகளை ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாது.

# கத்தாரை தொட்டால் அழிவு நிச்சயம்: டிரம்ப்!



அமெரிக்கா, மார்ச். 20–

மேற்காசிய நாடுகளின் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிலையங்கள் மீது ஈரான் நடத்திய தாக்குதலுக்கு, அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், தன் சமூக வலைதள பக்கத்தின் வாயிலாக ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது: மேற்காசியாவில் நடந்து வரும் போர் காரணமாக ஈரானின், 'சவுத் பார்ஸ்' இயற்கை எரிவாயு தளம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. இத்தாக்குதல் குறித்து அமெரிக்காவுக்கு முன்பே தெரியாது.

கத்தார் ஒரு அப்பாவி நாடு. அதன் மீது ஈரான் தேவையற்ற முறையில் தாக்குதல் நடத்துவது முறையல்ல. இனி இஸ்ரேல் ஈரானை தாக்காது. ஆனால், ஈரான் மீண்டும் கத்தார் மீது கை வைத்தால், ஈரானின் ஒட்டுமொத்த எரிவாயு தளங்களையும் அமெரிக்கா தரைமட்டமாக்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# துரைமுருகனுக்கு இனி அமைச்சர் பதவி கிடையாதா? - தி.மு.க.வில் பரபரப்பு!



சென்னை, மார்ச். 20–

தி.மு.க. பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகனுக்கு 87 வயது ஆகிறது. சமீபத்தில் வீட்டில் கீழே விழுந்த அவருக்கு முதுகு எலும்பில் காயம் ஏற்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். நீண்ட நாட்களாக ஓய்வில் இருந்த அவர், சமீபத்தில் நடந்த தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அவருடைய வயோதிகம் மற்றும் உடல்நலக்குறைவை காரணம் காட்டி, இந்த முறை சட்டசபை தேர்தலில் அமைச்சர் துரைமுருகனுக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கப்படாது என்ற தகவல் தி.மு.க. வட்டாரத்தில் பரவியது. ஏற்கனவே, 4 அமைச்சர்களுக்கு சீட் கிடையாது என்று கூறப்பட்டு வரும் நிலையில், இந்த தகவல் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், அமைச்சர் துரைமுருகனை துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து பேசியுள்ளார். அப்போது, தேர்தலில் போட்டியிடும் தனது விருப்பத்தை துரைமுருகன் அவரிடம் தெரிவித்துள்ளார்.

இதுவரை ராணிப்பேட்டை மற்றும் காட்பாடி தொகுதியில் இருந்து 10 முறை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள துரைமுருகன், 1996–ம் ஆண்டு முதல் தொடர்ந்து வெற்றி பெற்று வந்துள்ளார். தி.மு.க. ஆட்சி காலத்தில் பலமுறை அமைச்சராகவும் இருந்துள்ளார். எனினும், கடந்த (2021) தேர்தலில் 1000 வாக்குகளுக்கும் குறைவான வித்தியாசத்திலேயே காட்பாடி தொகுதியில் வெற்றி பெற்றார்.

நீண்ட நெடுங்காலம் அமைச்சராக இருந்து வரும் துரைமுருகனுக்கு இந்த முறை போட்டியிட சீட் வழங்கப்படாது என்ற தகவல் தி.மு.க. வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து பேசிய நிலையில், கடைசியாக இந்த ஒருமுறை மட்டும் அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிகிறது.

எனினும், தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் பட்சத்தில், அமைச்சர் பதவி எதுவும் அவருக்கு வழங்கப்படாது என்றும் கூறப்படுகிறது. இதுகுறித்த தகவல் துரைமுருகனிடம் தெரிவிக்கப்பட்டபோதும், அவரிடம் இருந்து எந்த பதிலும் வெளியாகவில்லை என்று கூறப்படுகிறது.

# இஸ்ரேலின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது ஏவுகணை வீச்சு!



இஸ்ரேல், மார்ச். 20–

ஈரான் மீது அமெரிக்கா–இஸ்ரேல் இணைந்து கடந்த 28–ந்தேதி போர் தொடுத்தன.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

சில நாட்களுக்கு முன்பு ஈரானின் எண்ணெய் கிடங்குகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது ஈரான் நடத்தியது.

இதற்கிடையே நேற்று முன்தினம் ஈரானின் சவுத் பார்ஸ் எரிவாயு வயலின் உற்பத்தி நிலையம் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக கத்தாரில் உள்ள உலகின் மிகப்பெரிய திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி) ஆலை மீது ஈரான் ஏவுகணை தாக்குதலை நடத்தியது. அதேபோல் வளைகுடா நாடுகளில் உள்ள மற்ற எண்ணெய் வளங்கள் மீதும் தாக்குதல் நடத்தியது.

இந்த நிலையில் இஸ்ரேலின் மிக முக்கியமான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி உள்ளது. இஸ்ரேலின் 3–வது பெரிய நகரமான ஹைபாவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. இதன் மீது பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஈரான் வீசியது.

அதை இஸ்ரேலின் வான்பாதுகாப்பு அமைப்புகளால் தடுக்க முடியவில்லை. இதனால் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்குள் ஏவுகணைகள் விழுந்து வெடித்தன. மேலும் சுத்திகரிப்பு நிலையத்தில் தீ கொழுந்துவிட்டு எரிந்து கடும் புகைமூட்டம் எழும்பியது. தீயை அணைக்க கடுமையாக போராடி வருகிறார்கள். தாக்குதல் காரணமாக அங்கு கடும் சேதம் ஏற்பட்டுள்ளது.

ஹைபா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இஸ்ரேலின் மிக முக்கியமான எரிசக்தி மையங்களில் ஒன்றாகும். இஸ்ரேலின் உள்நாட்டு எரிபொருள் தேவைகளில் சுமார் 50 முதல் 60 சதவிதம் வரை இந்த நிலையம் பூர்த்தி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் இஸ்ரேலின் தெற்கில் உள்ள அஷ்டோட் நகரில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீதும் ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. அங்கும் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது.

21–வது நாளை எட்டியுள்ள இப்போரில் ஈரான் மீது இன்று அதிகாலை இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியது. தலைநகர் தெக்ரான் முழுவதும் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

அதேபோல் வளைகுடா நாடுகள் மீதான தனது தாக்குதலை ஈரான் தொடர்ந்தது. சவுதி அரேபியாவில் சுல்தான் விமானப்படை தளத்தில் டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது.

குவைத்தில் உள்ள மினா அல்–அஹ்மதி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது ஈரான் டிரோன் தாக்குதலை நடத்தியது.

இதனால் அங்கு தீப்பிடித்து எரிந்தது. ஐக்கிய அரபு எமிரேட்சின் துபாய் மீது டிரோன்கள் ஏவப்பட்டன.

# கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடக்கம்!




சென்னை, மார்ச். 20–

மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில், பால்வாடிகா எனும் பாலர் வகுப்புகளில் குழந்தைகளை சேர்க்க ஆன்லைன் விண்ணப்ப பதிவு இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்குகிறது.

குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் ஏப்ரல் 2–ந் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப பதிவு முடிந்ததும், குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும் குழந்தைகளுக்கு பாலர் வகுப்பில் சேர்க்கை வழங்கப்படும். குழந்தைகளின் சேர்க்கையை பொறுத்து 3 முறை பட்டியல் வெளியிடப்படும். மேலும், விபரங்களை https://rochennai.kvs.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

# பயன்படுத்துபவர் பெயர் அடிப்படையில் மெசேஜ் அனுப்பலாம்; வருகிறது வாட்ஸ்அப் புது வசதி!

மும்பை, மார்ச். 20–

மொபைல் போன் எண்ணுக்கு பதிலாக, பயனரின் (Usernames) பெயரை பயன்படுத்தி மெசேஜ் மற்றும் வீடியோ கால் செய்யும்



வசதியை வாட்ஸ் அப் விரைவில் அறிமுகப்படுத்த இருக்கிறது.

மெட்டா நிறுவனத்திற்கு சொந்தமான வாட்ஸ் அப் செயலி உலகளவில் கோடிக்கணக்கான பயனாளர்களைக் கொண்டுள்ளது. மெசேஜ், வீடியோ கால் மற்றும் பேமெண்ட் என பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ள வாட்ஸ் அப், பயனர்களின் வசதிக்கு ஏற்ப, அடிக்கடி அப்டேட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தற்போது மொபைல் போன் எண்களுக்கு பதிலாக, பயன்படுத்துபவர் பெயர் அடிப்படையில் (username)மெசேஜ் மற்றும் வீடியோ கால் செய்யும் வசதியை வாட்ஸ் அப் விரைவில் அறிமுகப்படுத்த இருக்கிறது, தனித்துவமான பயனர் பெயர்களை பயன்படுத்தி மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளலாம். வாடிக்கையாளர்கள், வர்த்தக நிறுவனங்களும் தனித்துவமான பயனர் பெயர்களை முன்பதிவு செய்துகொள்ள முடியும். இது குறித்து வாட்ஸ்அப் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், 'புதிய நண்பர்கள், குழுக்கள் மற்றும் வணிக நிறுவனங்களுடன் மொபைல் போன் எண்களைப் பகிராமலேயே இணைவதற்கு இந்த வசதி உதவிகரமாக இருக்கும். இது தேவையற்ற அழைப்புகளை குறைக்கவும், பயனர்களின் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்கவும் உதவும்,' எனக் கூறினார். வரும் ஜூன் மாதத்திற்குள் இந்த புதிய வசதி அறிமுகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சேலத்தில் பயங்கர விபத்து... அரசுப் பேருந்து மோதி 4 பேர் உயிரிழப்பு!



சேலம், மார்ச். 20–

சேலம் மாவட்டம் அரியானூர் பகுதியில் நிகழ்ந்த பயங்கர விபத்தில் அரசுப் பேருந்து மோதி 4 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக கோவையில் இருந்து சேலம் நோக்கி அரசுப் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் அரியானூர் பகுதி அருகே வந்தபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, சாலையோரம் சென்று கொண்டிருந்த பைக் மற்றும் டெம்போ மீது மோதி சாலையின் மறுபக்கம் சென்றது. இந்த கோர விபத்தில் பைக்கில் வந்த 2 பேர் உட்பட 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்து குறித்து அறிந்த போலீசார், சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று உயிரிழந்தவர்களின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வேலை வாய்ப்பு

## இந்தியா இன்பிராஸ்டிரக்சர் ஃபைனான்ஸ் கம்பனி லிமிட்டெட்: 33 காலியிடங்கள்!

**IIFCL Recruitment 2026**

- Vacancy: 33
- Post Name: Assistant Manager, Manager
- Qualification: B.E/B.Tech, LLB, Post Graduate, CA/CMA
- Selection Process: Online Examination, Interview

நிறுவனத்தின் பெயர்: இந்தியா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

அறிவிப்பு எண்: IIFCL/HCM/2026/04

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 33 உதவி மேலாளர் (தரம் A) பணியிடங்கள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 18.03.2026

கடைசி தேதி: 10.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://iifcl.in/

# சற்றே உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, மார்ச். 20–

தொடர்ந்து இறங்குமுகத்தில் இருந்த தங்கம் விலை இன்று சற்றே விலை உயர்ந்துள்ளது. சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400 உயர்ந்து ரூ.1,11,600–க்கும், கிராமுக்கு ரூ.50 உயர்ந்து ரூ.13,950–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை உயர்ந்த நிலையில் வெள்ளி விலை இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.260–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 தொடர்பான தேர்தல் பணிகள் சுமூகமாகவும், சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், இந்திய தேர்தல் ஆணையத்தால் நீலகிரி மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட பொது பார்வையாளர்கள் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி தான்வி சுந்த்ரியல், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி எஸ். ஹரீஷ், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதி சுஹாஸ், காவல் பார்வையாளர் லதா மனோஜ் மற்றும் செலவு கண்காணிப்பு பார்வையாளர்கள் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி கஜேந்திர சிங் ஐ.ஆர்.எஸ், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி வைபவ் மாதவ் ராவ் ஐ.ஆர்.எஸ், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதி அஜித் டான் ஐ.ஆர்.எஸ் ஆகியோர் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறையில் செயல்பட்டு வரும் ஊடக கண்காணிப்பு மையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா, மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர், மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் உட்பட பலர் உள்ளனர்.



## சினிமா துளிகள்..!

### மீண்டும் அதே களத்தில் சுந்தர் சி!



இயக்குநர் சுந்த சி தற்போது மூக்குத்தி அம்மன் 2 மற்றும் புருஷன் ஆகிய படங்களை கைவசம் வைத்துள்ளார். இதில் மூக்குத்தி அம்மன் 2 படத்தில் நயன்தாரா நடிக்க படப்பிடிப்பு முடிந்துள்ளது. புருஷன் படத்தில் விஷால் நடிக்க படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் அவர் நாயகனாக புதுப்படத்தில் நடிக்க கமிட்டாகியுள்ளார். இப்படத்தை இவரை வைத்து ஏற்கனவே 'இருட்டு', 'தலைநகரம் 2' படங்களை இயக்கிய துரை இயக்குகிறார்



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## “நான்கு நாட்களில் எல்லாம் முடிஞ்சிரும்” - இபிஎஸ்

சென்னை, மார்ச். 20–
அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி, பாஜக மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷாவை பல முறை டெல்லியில் சந்தித்து பேசி வருகிறார். (மார்ச் 19) டெல்லி சென்று சந்தித்து ஆலோசனை நடத்தினார். அவரைத் தொடர்ந்து கூட்டணியில் உள்ள அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன் மற்றும் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் உள்ளிட்டோரும் அமித் ஷாவை (மார்ச் 20) சந்திக்கின்றனர். அமித்ஷாவை சந்தித்த பின்னர், டெல்லி விமான நிலையத்தில் எடப்பாடி பழனி சாமி செய்தியாளர்களைச் சந்தித்தார்.



அப்போது அவர் கூறியதாவது, “ தமிழகத்தில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள கட்சிகளிடையே தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடைபெற்று வருகின்றன. கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் கிட்டத்தட்ட நிறைவு பெற்றுவிட்டன. புதிய கட்சிகள் கூட்டணியில் இணைய வாய்ப்பில்லை. ஒவ்வொரு கட்சிக்கும் ஒதுக்கப்பட்ட தொகுதிகள் குறித்த விவரங்கள் அடங்கிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு நான்கு நாள்களுக்குள் வெளியிடப்படும்.

எங்கள் கூட்டணியில் எந்த சிக்கலும் கிடையாது. யார் யாருக்கு எந்தெந்த தொகுதியில் வெற்றி வாய்ப்பு இருக்கிறதோ? அதனடிப்படையில் தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்துடன் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை. தமிழ்நாட்டில் 31 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த கட்சி. அதிமுக விரைவு ரயில் போல வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. பல மாநிலங்களில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பிரதமர் மோடி மூன்று முறை தமிழகத்துக்கு வந்திருக்கிறார். பிரதமர் மோடி தலைமையில், மதுரை, மதுராந்தகம், திருச்சி என மூன்று இடங்களில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மீண்டும் பிரதமர் மோடி, விரைவில் தமிழ்நாட்டு வரவிருக்கிறார். கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் நிறைவு செய்துவிட்டன. இனி தேர்தலை நோக்கி விரைவாகப் பயணிக்கவுள்ளோம்” எனத் தெரிவித்தார்..

## திமுக பேச்சுவார்த்தை குழுவிடம் விருப்பமான 10 தொகுதிகளின் பட்டியலை வழங்கியது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி!

சென்னை, மார்ச். 20–
திமுக பேச்சுவார்த்தை குழுவிடம் விருப்பமான 10 தொகுதிகளின் பட்டியலை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வழங்கியது. கடந்த முறை போட்டியிட்டு வென்ற தளி, திருத்துறைப்பூண்டி தொகுதிகளை மீண்டும் ஒதுக்க இந்திய கம்யூனிஸ்ட் கோரிக்கை. கடந்த முறை போட்டியிட்ட திருப்பூர் வடக்கு, பவானிசாகர், சிவகங்கை, வால்பாறை தொகுதிகளையும் இந்திய கம்யூனிஸ்ட் கேட்கிறது.



## அத்தியாவசிய பணியில் இருக்கும் வாக்காளர்கள் தபால் ஓட்டு போடுவது எப்படி? தேர்தல் கமிஷன் விளக்கம்!

சென்னை, மார்ச். 20–
அத்தியாவசிய பணியில் இருக்கும் வாக்காளர்கள் தபால் ஓட்டு போடுவது எப்படி? தேர்தல் கமிஷன் விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் கமிஷன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

சட்டமன்ற தேர்தலில் முதியோர், மாற்றுத்திறனாளிகள், சேவை வாக்காளர்கள், தேர்தல் பணியில் உள்ள வாக்காளர்கள் ஆகியோர் தபால் ஓட்டு போட தேர்தல் கமிஷன் பல்வேறு வசதிகளை செய்துள்ளது.




மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி, 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் மாற்றுத்திறனாளிகள் என அடையாளப்படுத்தப்பட்டவர்கள் தபால் ஓட்டு மூலம் தங்கள் வாக்கை செலுத்தலாம்.

இத்தகைய வாக்காளர்கள், விண்ணப்பப்படிவம் 12டி–யை பூர்த்தி செய்து, தேர்தல் அறிவிக்கை வெளியான (வேட்புமனு தாக்கல் தொடங்கும் நாள்) 5 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலம் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

வாக்கு சேகரிக்கும் குழுக்கள். அந்த வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று வாக்குகளை சேகரிப்பார்கள். இதற்கான கால அட்டவணை தேர்தல் நடத்தும் அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு வேட்பாளர்களுக்கும் பகிரப்படும்.

தேர்தல் தேதியன்று அத்தியாவசியப் பணிகளில் இருக்கும் வாக்காளர்கள். தங்கள் துறையின் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் மூலம் தபால் ஓட்டு வசதிக்கு விண்ணப்பிக்கலாம். தீயணைப்புத்துறை, சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, ஆம்புலன்ஸ் சேவைகள், விமான போக்குவரத்து, அரசு சாலைப் போக்குவரத்துக் கழகங்கள் உள்ளிட்ட சில துறைகள் இந்த வசதியின் கீழ் வருகின்றன.வாக்குப்பதிவு நாளன்று செய்தி சேகரிப்புக்காக தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களும் அத்தியாவசியப் பணிகளில் உள்ள ‘வராத வாக்காளர்கள்’ என்ற பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர், அவர்களும் தபால் வாக்கு வசதிக்கு தகுதியுடையவர்களாவர்.

தேர்தல் பணியில் இருக்கும் ஒரு வாக்காளர் தனது தபால் வாக்கைப் பெற்று, அதில் தனது வாக்கை பதிவு செய்து, அதற்கான வசதி அமைக்கப்பட்டுள்ள மையத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அங்கு வாக்காளர் முழுமையான ரகசியக்கடன் வாக்களிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.சேவை வாக்காளர்களுக்கு தபால் வாக்குகள், மின்னணு முறையில் அனுப்பப்படும். வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டவுடன் இவை அனுப்பப்படும். இதற்கான தபால் செலவை சேவை வாக்காளர்கள் ஏற்க வேண்டியதில்லை. பதிவு செய்யப்பட்ட தபால் ஓட்டுகள் அனைத்தும் வாக்கு எண்ணும் நாளான மே 4–ந் தேதியன்று காலை 8 மணிக்குள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களை சென்றடைய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விஜயுடன் கூட்டணி அமையுங்கள்: ராமதாசை வலியுறுத்தும் நிர்வாகிகள்!

சென்னை, மார்ச். 20–
“த.வெ.க.,வுடன் கூட்டணி அமைக்க வேண்டும்,” என, பா.ம.க., நிறுவனர் ராமதாசை, அவரது ஆதரவு நிர்வாகிகள் வலியுறுத்தியுள்ளனர்.

சட்டசபை தேர்தலுக்கான அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து, திண்டிவனம் அருகே தைலாபுரம் தோட்டத்தில் முக்கிய நிர்வாகிகளுடன், ராமதாஸ் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார்.



பல மணி நேரம் நடந்த கூட்டத்தில், ‘தி.மு.க., – அ.தி.மு.க.,வுடன் கூட்டணி இல்லை என்பது உறுதியாகிவிட்டது. எனவே, அடுத்தகட்ட முயற்சியாக, த.வெ.க.,வுடன் கூட்டணி அமைக்க வேண்டும்’ என ராமதாசை பா.ம.க., நிர்வாகிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அனைவரின் கருத்துகளையும் கேட்ட ராமதாஸ், ‘கட்சியின் எதிர்காலம் கருதி, கூட்டணி குறித்து சிறந்த முடிவை எடுப்பேன்’ என கட்சியினரிடம் தெரிவித்து உள்ளார்.

## வாக்குப்பதிவு தினத்தன்று பொதுவிடுமுறை விடுங்கள்! தேர்தல் ஆணையம்!




சென்னை, மார்ச். 20–
தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறும் ஏப்.23–ம் தேதி அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பொது விடுமுறை விட வேண்டும் என்று தமிழக அரசுக்கு, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. தொழிலாளர் பணியாற்றும் தொகுதியில் தேர்தல் நடைபெறாவிட்டாலும், தேர்தல் நடைபெறும் தொகுதியில், அந்த தொழிலாளி வாக்காளராக இருந்தால் அவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிக்க வேண்டும். தினக்கூலி தொழிலாளராக இருந்தாலும் விடுப்பு அளிக்க வேண்டும் இவ்வாறு தமிழக அரசுக்கு, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.

## புதுச்சேரியில் த.வெ.க. தனித்து போட்டி?



புதுச்சேரி, மார்ச். 20–
சட்டசபை தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடப் போவதாக த.வெ.க. திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் புதுச்சேரியிலும் த.வெ.க. தனித்து போட்டியிடுவதாக தகவல் வெளியாகி உள்ளது.

புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட த.வெ.க. முடிவு செய்துள்ளது. புதுச்சேரியில் போட்டியிடும் 30 தொகுதிகளின் வேட்பாளர்களின் பட்டியலும் தயாராகி உள்ளதாகவும் இன்று அல்லது நாளை வேட்பாளர் பட்டியலை விஜய் அறிவிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## தேர்தல் நடத்தை விதிகளை அமல்படுத்த சென்னை விமான நிலையத்தில் அதிகாரிகள் நியமனம்!



சென்னை, மார்ச். 20–
சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நடத்தை விதிகளை அமல்படுத்தும் விதமாக சென்னை விமான நிலையத்தில் சிறப்பு அதிகாரிகளை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

## எடப்பாடி பழனிசாமியை தொடர்ந்து அன்புமணி– டி.டி.வி. தினகரன் டெல்லி பயணம்!



சென்னை, மார்ச். 20–
அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க.வுக்கு 17 தொகுதிகளும், அ.ம.மு.க.வுக்கு 9 தொகுதிகளையும் ஒதுக்குவதற்கு வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பான பேச்சுவார்த்தையை இறுதி செய்யும் வகையிலேயே அன்புமணியும், டி.டி.வி. தினகரனும் டெல்லி சென்று இருப்பதாக கூறப்படுகிறது.

டெல்லியில் இன்று மத்திய அமைச்சர் அமித்ஷா மற்றும் பா.ஜ.க தலைவர்களை இருவரும் தனித்தனியாக சந்தித்து பேச இருக்கிறார்கள்.

இந்த சந்திப்பின்போது சட்டமன்ற தேர்தல் மற்றும் தொகுதி பங்கீடு தொடர்பாக இருவரும் தீவிர ஆலோசனையை மேற்கொள்ள உள்ளனர். இதன் முடிவில் பா.ம.க.வு–க்கும், அ.ம.மு.க.–வுக்கும் எத்தனை தொகுதிகள் என்பது இறுதிச் செய்யப்பட இருக்கிறது.

தமிழக தேர்தல் பொறுப்பாளரும் மத்திய அமைச்சருமான பியூஸ் கோயல் நாளை சென்னை வருகை தர உள்ளார். அதற்குள் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை டெல்லியில் இறுதி செய்வதற்கு பாரதீய ஜனதா தலைமை திட்டமிட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து அடுத்தடுத்து எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட கூட்டணி தலைவர்கள் டெல்லி பயணம் மேற்கொண்டுள்ளனர். தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை இன்னும் சில தினங்களில் இறுதி செய்யப்பட்டு அதற்கான அறிவிப்பு வெளியாக இருக்கிறது. இதன் பின்னர் அ.தி.மு.க, பா.ஜ.க. தேர்தல் அறிக்கையும் வெளியிடப்பட உள்ளது.

இதனைத் தொடர்ந்து அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க தலைவர்கள் தமிழகத்தில் தனித்தனியாகவும் கூட்டாகவும் தேர்தல் பிரசாரத்திற்கு செல்ல திட்டமிட்டு இருக்கிறார்கள்.

## மா.கம்யூ., ம.நீ.ம., வி.சி.க.வுடன் இழுபறி: தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு சிக்கலுக்கு என்ன காரணம்?

சென்னை, மார்ச். 20–
கடந்த (2021) சட்டசபை தேர்தலில் 13 கட்சிகளுடன் கூட்டணி அமைத்த தி.மு.க., இந்த முறை (2026) 26 கட்சிகளுடன் மெகா கூட்டணி அமைத்துள்ளது.

கடந்த தேர்தலில் தி.மு.க. 173 தொகுதிகளில் போட்டியிட்டபோதும், கூட்டணி கட்சிகளான ம.தி.மு.க. (6), கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி (3), மனிதநேய மக்கள் கட்சி (2), அகில இந்திய பார்வர்டு பிளாக் (1), தமிழக வாழ்வுரிமை கட்சி (1), மக்கள் விடுதலை கட்சி (1), ஆதிதமிழர் பேரவை (1) ஆகிய கட்சிகளும் தி.மு.க.வின் சின்னமான உதயசூரியனிலேயே போட்டியிட்டன. ஆக மொத்தம் உதயசூரியன் சின்னத்தில் களம் கண்டவர்கள் 188 பேர்.

2026 சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில், தே.மு.தி.க., மக்கள் நீதி மய்யம், எஸ்.டி.பி.ஐ. உள்பட மேலும் 13 கட்சிகள் கூடுதலாக இணைந்துள்ளன. ஏற்கனவே, கடந்த முறை தி.மு.க. கூட்டணியில் 25 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியும், தலா 6 தொகுதிகளில் போட்டியிட்ட ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, விடுதலை சிறுத்தைகள் கட்சியும் இந்த முறை கூடுதல் தொகுதிகளை கேட்டுவந்தன.

### கூட்டணி கட்சிகள் அதிர்ச்சி

ஆனால், கூட்டணியில் இணைந்துள்ள புதிய கட்சிகளுக்கும் தொகுதிகள் ஒதுக்க வேண்டியிருப்பதால், கூடுதல் தொகுதிகள் தரமுடியாது, மாறாக இந்த முறை தொகுதிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்படும் என்று தி.மு.க. தலைமை கூறியதால், கூட்டணி கட்சிகள் அதிர்ந்து போயின.

என்றாலும், காங்கிரஸ் கட்சி கடுமையாக போராடி, கடந்த முறையைவிட 3 தொகுதிகள் கூடுதலாக, அதாவது 28 இடங்களை பெற்றுக்கொண்டது. இதேபோல், ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு கட்சி போராடினாலும், ம.தி.மு.க.வுக்கு 2 தொகுதிகள் குறைவாகவும் (4), இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 1 தொகுதி குறைவாகவும் (5) ஒதுக்கப்பட்டது.

### தி.மு.க. மறுப்பு

தற்போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, மக்கள் நீதி மய்யம் ஆகியவை கூடுதல் தொகுதிகளுக்காக தி.மு.க. கூட்டணியில் போராடி வருகின்றன.

ஆனால், தி.மு.க. தரப்போ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு கடந்த முறையைவிட ஒன்று குறைவாக 5 தொகுதிகளும், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு கடந்த முறையை போல 6 தொகுதிகளும், புதிய வரவான மக்கள் நீதி மய்யத்துக்கு 2 தொகுதிகளும் ஒதுக்க முன்வந்துள்ளது. அதுவும், மக்கள் நீதிமய்யம் தி.மு.க.வின் சின்னமான உதயசூரியனிலேயே போட்டியிடவும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.



### கூட்டணி கட்சிகள் போர்க்கொடி

அதே நேரத்தில், தி.மு.க. கூட்டணியில் கடைசியாக இணைந்த தே.மு.தி.க.வுக்கு இன்னும் எத்தனை தொகுதிகள் என்று அறிவிக்கப்படவில்லை. ஏற்கனவே, அந்தக் கட்சிக்கு ஒரு ராஜ்யசபா சீட் வழங்கப்பட்டுவிட்ட நிலையில், 10 தொகுதிகள் ஒதுக்கப்பட உள்ளதாகவும் தகவல்கள் கசிகின்றன.

இதை கேள்விப்பட்ட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, மக்கள் நீதிமய்யம் உள்ளிட்ட கட்சிகள் அதிருப்தி அடைந்துள்ளன. கூட்டணிக்கு இப்போது வந்த கட்சிக்கு, அதுவும் வாக்கு வங்கியில் எங்களைவிட குறைவான சதவீதம் வைத்துள்ள கட்சிக்கு கூடுதல் தொகுதிகள் ஒதுக்குவது எந்தவிதத்தில் நியாயம் என்றும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

### தி.மு.க. கூட்டணியில் தொடரும் சிக்கல்

தே.மு.தி.க.வுக்கு அதிக தொகுதிகள் கொடுத்து, கூட்டணிக்குள் கொண்டுவர தி.மு.க. முடிவுசெய்ததற்கு, அ.தி.மு.க.வுடனும் தே.மு.தி.க. கூட்டணி பேசிவந்ததே காரணம் என்று சொல்லப்படுகிறது. அ.தி.மு.க. கூட்டணிக்கு தே.மு.தி.க. சென்றுவிடக்கூடாது என்பதற்காகவே, கூடுதல் தொகுதிகள் தர தி.மு.க. சம்மதித்ததாகவும் கூறப்படுகிறது.

ஆனால், தே.மு.தி.க. வந்ததால்தான், தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீட்டில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தற்போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, மக்கள் நீதி மய்யம் ஆகிய 3 கட்சிகளும் தங்களுடைய நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றன. குறைந்த தொகுதிகளை ஏற்றுக்கொள்ளலாமா?, அல்லது வேறு முடிவு எடுக்கலாமா? என்று யோசித்துக் கொண்டு இருப்பதால், தி.மு.க. கூட்டணியில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகிறது.

## த.வெ.க. உடன் கூட்டணி பேச்சுவார்த்தையா? - புதுச்சேரி முதலமைச்சர் விளக்கம்!

திருச்செந்தூர், மார்ச். 20–
புதுச்சேரியில் வருகிற 9–ம் தேதி சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில் புதுச்சேரி முதல்–மந்திரி ரங்கசாமி நேற்று இரவு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வந்தார். பிரகாரத்தில் நடந்து சென்று அங்குள்ள தூண்டுகை விநாயகர் கோவிலில் வழிபாடு செய்தார்.

பின்னர் அவர் நேராக கோவிலுக்கு சென்று கோவிலில் சுவாமி மூலவர் சண்முகர், சத்ருசம்ஹார மூர்த்தி, தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட அனைத்து சன்னதிகளிலும் வழிபாடு செய்தார்.



பின்னர் அவர் நிருபர்களிடம் கூறும்போது, புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் கட்சி தற்போது வரை பா.ஜ.க. கூட்டணியில் தான் உள்ளது.

பா.ஜ.க.வுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடந்து வருகிறது என்றார். அப்போது நிருபர்கள், த.வெ.க. உடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெறுகிறதா என்று கேள்வி எழுப்பினர். அதற்கு மறுப்பு தெரிவித்த அவர் என். ஆர். காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு நன்றாக உள்ளதாக கூறினார்.

புதுச்சேரியில் பா.ஜ.க. –என்.ஆர்.காங்கிரஸ் கட்சி கூட்டணி தொடர்பாக பல்வேறு வதந்திகள் பரவி வரும் நிலையில் என்.ஆர். காங்கிரஸ் கட்சி தலைவரும் புதுச்சேரி முதல்–மந்திரியுமான ரங்கசாமி முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

## வி.சி.,யில் மார்ச். 21 முதல் விருப்ப மனு!

சென்னை.மார்ச். 20–
“சட்டசபை தேர் தலில், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் போட்டியிட, நாளை முதல் விருப்ப மனு பெறப்படும்,” என, அக்கட்சி தலைவர் திருமாவளவன் அறிவித்து உள்ளார்.

தி.மு.க., கூட்டணியில் இடம் பெற்றுள்ள வி.சி., இரட்டை இலக்க தொகுதிகளை கேட்கும் நிலையில், ஒற்றை இலக்கத்தில் தான் தொகுதிகள் ஒதுக்க முடியும் என, தி.மு.க., தரப்பு கூறி வருகிறது.

இந்நிலையில், ‘வி.சி., தலைவர் திருமாவளவன் வெளியிட்ட அறிக்கையில், ‘தேர்தலில் போட்டியிட விரும்புவோர், கட்சி தலைமையகத்தில் விருப்ப மனு அளிக்க வேண்டும். மார்ச் 21 முதல் 24ம் தேதி வரை, 38 மாவட்டங்களில் உள்ள தொகுதிகளுக்கும் விருப்ப மனு பெறப்படும்.

‘விண்ணப்ப கட்டணம் 100 ரூபாய்; விருப்ப மனு கட்டணம் 5,000 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது’ என கூறப்பட்டுள்ளது.



Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020